உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பக்ஷி தீர்த்தமென வழங்கும்

திருக்கழுக்குன்றத்

தலபுராணச் சுருக்கம்.



இது திருக்கழுக்குன்றம் அடிவாரசத்திரம் தர்மபரிபாலகராயும்
திருவநந்தபுரம் பென்ஷன் ஜட்ஜியாயுமுள்ள ஸ்ரீமான்

வேதாத்ரீ - சதாசமுதலியார்

அவர்கள் பொருளுதவியால்,

சிவராஜயோகி

சை. ர. நமசிவாய செட்டியார்

அவர்களால் சுருக்கித் திரட்டப்பட்டது.

இப்புத்தகமும் நூதனமாக அச்சிட்ட திருமலைப்படமும் (விலை அணா. கால்) வேண்டுவோர் சென்னை தம்பு செட்டி வீதி 255-நெம்பர் வீட்டிலும், திருக்கழுக்குன்றம். ஸ்ரீ திரிபுர சுந்தர விலாசம் கம்பெனி மானேஜரிடத்திலும் பெறலாம்.

இதன் விலை பிரதி 1-க்கு அணா அரை : 100-க்கு ரூ 2—8—0.

பராபவ௵ ஐப்பசி௴

1906.


SUN OF INDIA PRESS, MADRAS.

முகவுரை.

இத்திருக்கழுக்குன்றத் தலபுராணச்சுருக்கமும், திருமலைப்பட்டமும் முன்னர் அவ்வூர்வாசிகள் பலரால் அச்சிற்பதிப்பிக்கப்பட்டுக் வந்தபோதிலும் நவீன நாகரீகத்துக்கும் ஒழுங்குக்கும் சரிப்பட்டுவன் வராமைபற்றி, சென்னை வாசிகளில் ஸ்ரீ வேதகிரீஸ்வரர் பக்தர்களுளிக் ஸ்ரீமதி தனகோடி அம்மாள் என்னும் மாதுசிரோன்மணியின் உக்க வியால் திருமலைப்பட்டம் பூசிப்பதற்குரியபடி அச்சிற்பதிப்பிக்கப்பட்டு வெளியிட்டேன். தலபுராணமும், தலமகிமையும் ஒருங்கே எம் போன்ற எளியேன் வாசிப்பதற்கினிய எளிய செந்தமிழ் நடையில் எழுதிமுடித்ததை, திருவநந்தபுரம் பென்ஷன் ஜட்ஜியாயும், அடிவார சத்திர தர்மபரிபாலகராயும் உதார குணசீலராய் அன்பு, அடக்கம், பொறுமை, ஜீவகாருண்யம், ஈஸ்வரபக்தி, அடியார்பக்தி, குருபக்தி, முதலியசற்குணம் பொருந்தினவராயுமுள்ள ஸ்ரீமான்-வேதாத்ரீசதாச முதலியார் அவர்களது பொருளுதவியால் அச்சிட்டு வெளியிடலா னேன். உத்தமர்கள் இச்சிறு புத்தகத்திலுள்ள குற்றம் நீக்கி குணங் கொண்டு அடியேனை ஆதரிக்கும் வண்ணம் சிரம்வணங்கித் துதிக் கின்றேன்.

அடியார்க்கடியன்,

ஸ்ரீ சை. ர. நமசிவாய செட்டி.



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பக்ஷி தீர்த்தமென வழங்கும்

திருக்கழுக்குன்றத் தலமகிமை.

விஸ்தீர்ணம், எல்லைகள், ஜனத்தொகை.

செங்கல்பட்டு ஜில்லாவைச்சேர்ந்ததும், ஷை செங்கல்பட்டு ரெயில் டேஷனுக்கு 9-வது மயிலிலுள்ளதுமான பக்ஷிதீர்த்தமென்று வழங்கும் நக்கழுக்குன்றம் என்னும் புராதனமான தலமொன்றுண்டு. இது கிழக்கு மற்கு இரண்டு மயில், வடக்கு தெற்கு மூன்று மயில் விஸ்தீர்ணமுள்ளது. ர்ன்மெண்டார் கணக்குப்படி சுமார் 5, 728-ஜன சங்கியையுள்ளது.

மகிமை.

இது அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகப்பெருமானுகிய சமயா ளால் பாடல் பெற்று, ஸ்ரீ மாணிக்கவாசகப்பெருமானுக்குக் குருமூர்த்த -னம் கொடுத்த அற்புதமான விடமாகும். மற்றுமுண்டான சித்தர் ம், தபோதனர்களும் தங்கும்படியான சௌக்கியமான இடமுந்தவிர தவிசேஷம், ஸ்தலவிசேஷம் பொருந்திய மகிமையுள்ளது.

கிரிவிசேஷம்.

இங்கு நான்கு வேதங்களே நான்கு மலைகளாகவும், அதன் சிரசில் ஓர்திவ் யகட்டடமுள்ள புராதனமான கோயிலுண்டு. அம்மலைக்கு வேதகிரி யென் றும், அம்மலையினுச்சியிலுள்ள சுவாமிக்கு ஸ்ரீ வேதபுரீசர் என்றும் பெயர் உண்டு. இம்மலையினுச்சியில் 12-வருஷத்துக்கோர்தரம் தேவேந்திரனுல் இடி அபிஷேகம் நடப்பதுண்டு. இம்மலைக்குச் சிறிது கீழ் பாரிசத்தில் பக்ஷிபாறை யென்றும் அதற்கருகில் பக்ஷிதீர்த்த மென்று ஓர் தீர்த்தமுமுண்டு. பிரதிதினம் இரண்டுகழுகுகள் வந்து பக்ஷிபாறையிலுட்கார்ந்து பக்ஷிபண்டாரம் என்னும் சைவன் கொடுக்கும் சர்க்கரை அன்னத்தையும், நெய்யையும் சாப்பிட்டுப் போவது வெகுகால பழக்கமாயும் தெய்வீகமாகவுமிருக்கிறது. இம்மலையா

னது இரண்டு மூன்று மயிலுக்குக் குறையாத சுற்றளவுள்ளது. இம்மலையில் இன்றும் சிலதபோதனர்கள் வசிப்பதாகக்கேள்வி. புண்ணியர்களுக்கல்லோ புலப்படுவார்கள்.

உருத்திரகோடி ஆலயம்.

இம்மலைக்கு தெற்கே சுமார் அரைக்கால் மயில் தூரத்தில் அதாவது சங்குதீர்த்தத் தென்கீழ்கரைக்கருகே யுள்ளது. இவ்வாலயம் இதுதான் திரு கழுக்குன்றத்துக்கு முதன்மைபெற்றது. இவ் உருத்திரகோடி க்ஷேத்ரந்த இக் கழுக்குன்றத்துக்கே சங்கல்பாதி காலங்களில் முதன்மையாகப் பா கப்படுகின்றது. இது விபரம் பின்வரும் தலபுராணத்தில் விபரமாய்ப் பார் லாம்.

பக்தவற்சலர் ஆலயம்.

இம்மலைக்குக்கீழே நான்கு பெரிய கோபுரங்களும் இரண்டு பிரகாரங்க ளும் அமைந்த பெரிய கோயிலொன்றுண்டு. இதிலுள்ள சுவாமிக்குப் பக்த வற்சலர் என்றும் அம்மனுக்கு ஸ்ரீ திரிபுரசுந்தரி என்றும் பெயர். சித்திரை மாதத்தில் சுவாமிக்குப் ப்ரம்மோற்சவமும், ஆடிப்பூரத்தில் அம்பாளுக்குப் பிரம்மோற்சவமும் மற்ற பஞ்சபர்வாதி உற்சவங்களும் கிரமமாக நடைபெற கின்றது.

தீர்த்தவிசேஷம்.

இந்த மலையைச்சுற்றிலும் 12-தீர்த்தங்கள் உண்டு. அதின்விபரம் புராண சுருக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது. முக்கியமாயுள்ளது சங்குதீர்த்தம். இந்த தீர்த்தத்தில் 12-வருத்துக் கோர்தரம் சங்குபிறப்பது வழக்கம். நாளது வரையும் நடந்து வருகிறது.

ஜனவருகை.

இந்த க்ஷேத்திரத்திற்கு தினந்தோறும் நூற்றுக்கணக்கான ஜனங் வருவதும், கிரிப்பிரதக்ஷணம் செய்வதற்குச் சரீரபீடையுள்ள பலர்வந்து நாள்வசிப்பதும் பெருத்த வழக்கமாயிருக்கிறது. செவ்வாய்க்கிழமை தோ சுற்றுப்பக்கமுள்ள ஜனங்கள்வந்து கிரிப்பிரதக்ஷிணம் செய்து பெரும்பய அடைந்துபோகின்றார்கள்.

தர்மசத்திரங்களும், ப்லவருணத்தவரும்.

இந்த க்ஷேத்திரத்தில் பிரபுக்கள் பலர்தர்மசத்திரங்கள் பலகட்டிவிட் டிருக்கிறார்கள். உற்சவகாலங்களில் ஷைசத்திரங்களில் அன்னமளிப்பதும், வரு கிறவர்கள் தங்குவதற்கு இடம் கொடுப்பதுமான வழக்கமுண்டு. இங்கு ஆதி சைவர்களாகிய குருக்கள்மார்கள், வைதீகாசாரமுள்ள பிராமணர்கள், ஆகம சம்பந்திகளாகிய சைவர்கள், மற்றமுண்டான பலவித ஜாதியார்களும் வசி க்கிறார்கள்.

வியாபாரம்.

இங்கு வசிப்போர் எல்லோருக்கும் பயிர் ஜீவனம் முக்கியம். சில்லரைக் கடை வியாபாரங்களும், சொற்ப ஜவுளிக்கடைகளும், மளிகை வியாபாரங்கள் சில்லரையாகவும் நடந்தேறி வருகின்றது. இதற்கு ஆதாரம் சென்னைதவிர செங்கல்பட்டும் முக்கியம்.

அடிவாரசத்திர மகிமை.

அடிவாரசத்திரம், தர்மம், பரிபாலகர் முதலியவை.

இந்தக்ஷேத்திரத்தில் மலையடிவாரத்தில் பிர்ம்ம, க்ஷத்திரிய,வைசிய,சூத்திரர், கோஷாய்கள் வந்து தங்குவதற்கும் சமைத்து உண்பதற்கும் திவ்விய மான மூன்று பெரியசத்திரங்கள் ஸ்ரீமான் திருமணம் இராமலிங்கமுதலியார் அவர்களால் சுமார் 120-வருஷத்திற்கு முந்தி கட்டப்பட்டு 4-5 தலைமுறை யாக உத்தமோத்தமர்களது * மானேஜ்மெண்டின்கீழ் நாளது தேதிவரையும் நடந்து வருகின்றது.

சதாவர்த்தி.

இச்சத்திரத்தில் கோஷாய்கள், பயிராகிகள், நாள் ஒன்றுக்கு எத்தனை பேர் வந்தாலும் அத்தனை பேருக்கும் அரிசி, பருப்பு, விறகு முதலியவை கொடுப்பதுந்தவிர, காசிகங்கை கொண்டுவரும் எந்த ஜாதியாருக்கும் அரிசி முதலியவை கொடுத்து வருவதுண்டு.

நந்தவனம்.

ஸ்ரீ வேதகிரிப்பெருமானுக்கும், ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாளுக்கும், தின ப்படி புஷ்ப கயிங்கர்யத்திற்கு திவ்வியமான நந்தவனம் வைக்கப்பட்டிருக் கிறது.

பாடசாலை.

இச்சத்திரத்தினருகே இங்கிலீஷ்,தமிழ்,தெலுங்கு, கற்பிக்கும்படியான ஓர் சிறுபாடசாலை யுண்டு. அதில் அநேக பிள்ளைகள் கல்விகற்றுச் சுகமா யிருக்கிறார்கள்.

தேவாராதனை.

இத் திருக்கோயிலில் உற்சவமாய் வீதிவலம்வரும் ஸ்ரீவேதகிரிப் பெருமானும், ஸ்ரீ திரிபுர சுந்தரி யம்பிகையும், இவ்வடிவாரம் வரும்போது நடக் கும் தூபதீப நைவேத்திய உபசாராதிகளெல்லாம் இச் சத்திரத்தாருக்குடை

---

* இச்சத்திரத்தை இப்போது மானேஜ் மெணட் செய்கிறவர் ஸ்ரீநிவாச முதலியார் என்னும் பரமதயாளு இவர்செய்யும் உபசாரமும், மரியாதையும், எல்லோராலும் மிகபுகழத்தக்கது. மிகசாந்த குணமுடையவர். வெகு சிலர். பரமசாது. இவரை மானேஜராக எற்படுத்தி யிருப்பது சக்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது போலாம்.

யதே. வேதகிரி சுவாமிக்கு வேண்டிய அளவற்ற பெருமதிப்புள்ள ரத்நாபரணங்களும், வாகனாதிகள் பல்லக்குகள் முதலிய கோயிலுக்குரிய எல்லாவித சாமான்களும் (விக்கினங்கள் நீங்கலாக) இச்சத்திர அதிகாரிகள் இட்டதுண்டு.

அடிவார வம்ச பரம்பரை.

இச்சத்திரத்தார் ஆதியில் திருமணம் (இராமலிங்க முதலியார்.) (இரண்டாவது) ஷையார் குமாரர் சுலோசன முதலியார். (மூன்றாவது) ஷையார் குமாரர் ஸ்ரீமான் வேதாத்ரீ சதாசமுதலியார் (இப்போதுள்ளவர்). (நான்காவது) ஷையார் குமாரர் சுலோசனமுதலியார். இவருக்கு தற்காலம் இரண்டுபுத்திரர்கள் இருக்கிறார்கள். இப்பரம்பரை மென்மேலுமோங்கி விருத்தியாகுக.

இதர தர்மம்.

இச்சத்திரத்துக்காரராகிய 5-வது தலைமுறை திருமணம் இராமலிங்க முதலியார் அவர்கள் திருநெல்வேலியில் தாம்பிரவர்ணி நதியில் சுமார் லக்ஷ ரூபாய்செலவுசெய்து ஓர்கீர்த்தியான வாராவதிகட்டி, ஞாபகச்சின்னமாக அவ்வாராவதிக்கருகில் ஸ்ரீ சுலோசனமுதலியார் சிலாஸ்தம்பம் (Monument) எனசிலாஸ்தாபனமும் செய்யப் பெற்றுள்ளது. இப்பரம்பரையார் கவர்ன்மெண்டாருக்குச் செய்த உபகாரத்தைமுன்னிட்டு நன்றியறிதலாகக் கவர்ன்மெண்டார் அநேக சர்டிபிகேட்டுகள் கொடுத்துள்ளார்கள்.

கிரிப்பிரதக்ஷிணவிதி.

சரீரபீடையால் வருத்தப்படுவோரும், கர்மவியாதியுடையோரும்,இஷ்டகாம்யாதி சித்திபெற விரும்புவோரும், சிவபுண்யப்பேறடைய இச்சிப்போரும் இச்க்ஷேத்திரத்தில் வந்து தங்கி, பஞ்ச பஞ்ச உஷத்காலத்தில் எழுந்து, நித்தியக்கடனை முடித்து, சங்குதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, உலர்ந்த வஸ்திரம்உடுத்தி,விபூதி ருத்திராக்ஷமணிந்து, அவரவர்க்குரிய அநுஷ்டான ஜெபதபங்களைச் செய்துகொண்டு, சிவநாம உச்சரிப்போடு கிரிப்பிரதக்ஷிணம் செய்து வரவேண்டும். பிறகு பக்தவற்சலப்பெருமானையும் அம்பாளையும் வணங்கி, சுத்தமான அன்னம் சமைத்து உண்டு, பகல் உறக்கமின்றி,தலபுராணச்சுருக்கமாவது வேறுவகையான சத்காலக்ஷேபமாவது செய்யவேண்டும். மாலையிலும் இவ்வாறு சங்குதீர்த்த ஸ்நாநமும், பிரதக்ஷிணமும் செய்து பக்தவற்சலப் பெருமானையும் ஸ்ரீ திரிபுரசுந்தரியையும் அஷ்டோத்தரங்களால் அருச்சித்துப் பூசித்து வந்து, அற்ப ஆகாரமுண்டு உறங்கவேண்டும். இவ்வாறு நாற்பது நாளைக்குக் குறையாமல் பிரதக்ஷிணம் செய்யவேண்டும். வாரத்துக்கொருமுறை, மலைமேலேறி ஸ்ரீ வேதகிரிப்பெருமானுக்கு அருச்சனை புரிதல் உத்தமம். அன்றைக்கு சாதுக்களுக்கு அன்னமளித்தல் உத்தமம். பிரதக்ஷிணம்செய்துவருங்கால் இடையிடையே கிரியைச்சுற்றிலுமுள்ள 18-வித தீர்த்தங்களில் விதிப்படி ஸ்நாநம் செய்யவேண்டும். ஒரு மண்டலம் தீர்ந்தம் கடைசியன்றைக்கு தத்தம் சக்திக்கியைய, ஸ்ரீ வேதகிரீசப் பெருமானுக்

கும், ஸ்ரீதிரிபுரசுந்தரிக்கும், சுகமான அபிஷேகாதி அலங்காரம்செய்து வணங்கவேண்டும். சுத்தவைதிகப்பிராமணோத்தமர்களுக்கும் சாதுக்களுக்கும் தங்கள் பந்து மித்திரர்களுக்கும் அன்னம் அளித்து உதவவேண்டும். கூடுமானால் விபூதிப்பை,உருத்திராக்கமணி,ஆடையாதிகளும் கொடுத்து உதவலாம். இவ்வளவும் முடிந்தபிறகு சத்பிராமணரைக்கொண்டு நவக்கிரகாதி ஓமங்கள் செய்து விதிப்படி தானங்கள் செய்து, தத்தம் கிருகத்திற்குச் செல்லலாம். அநுகூலமாயிருக்கும் பக்ஷத்தில் பலமண்டலங்களும் பிரதக்ஷிணம் செய்யலாம். கிரிப்பிரதக்ஷிணம் செய்யும்போது வாகனமேறிச் செல்லுதலும், வீண் வார்த்தை பேசுதலும், வழியில் அசங்கியம் செய்து போதலும் ஒருக்காலும் கூடாவாம். கர்மவியாதிகளாயுள்ள பெருவியாதி, குஷ்டம் முதலிய வியாதியஸ்தர்கள் சங்குதீர்த்தத்தில் ஸ்நானம் செய்யும்போது ஜலத்தை கரைமேற் கொணர்ந்து குளித்தல் யாவருக்கும் சுகமாம்.

ஸ்ரீ திரிபுர சுந்தரவிலாச கூட்டு வியாபார கம்பெனி.

இந்த ஊரில் விவேகிகள் சிலர் சேர்ந்து லோகமாதாவாய் நம்மையெல்லாம் காத்து ரக்ஷிக்கும் ஸ்ரீதேவி நாமதேயத்தால் "ஸ்ரீ திரிபுரசுந்தரவிலாசக் கம்பெனி" யென நாமதேயமுள்ள ஓர் வியாபாரசாலை ஏற்படுத்தி அதில் பலவித மருந்து முதலிய வியாபாரம் செய்து வருவதுடன் கூபன் டிக்கெட் வியாபாரமும் செய்து வருகிறார்கள். இதுவல்லோ இந்துக்களின் ஒற்றுமையும் ஒழுங்குபாடும்.

விபூதி மான்மியம்.

விபூதியானது - கற்பம், அநுகற்பம், உபகற்பம் என மூன்றுவகைப்படும். இவைகளில் கற்ப விபூதிக்குரிய இலக்கணம்: அவயவப்பழுதானபசு, கன்னிப்பசு, கன்றுபோட நாள்சமீபித்தபசு, மலட்டுப்பசு, கிழப்பசு, கன்று இறந்தபசு இவைகள்ஆகாவாம். அழகுவாய்ந்த கன்றையுடைய பசுவாயிருக்கவேண்டும். அப்பசு சம்பாத்தாள் மேய்ந்திருக்குங்கால் அதன் சாணத்தை அட்டமி, சதுர்த்தசி, பூரணை இந்தத்திதிகளில் கீழ்விழுவதற்குமுன் பரிசுத்தத்தோடு எடுத்துவந்து மேல்வழும்பினை நீக்கிப் பஞ்சகவ்வியம் வார்த்துப் பிசைந்து, பதரில் உருட்டி அக்கினியில் தகித்துப் பதத்தில் எடுத்துப் புதுப் பாண்டத்தில் வைப்பது கற்பவிபூதியாகும். சித்திரைமாதத்தில் வனத்தில் உலர்ந்திருக்கும் சாணத்தை யெடுத்து வந்து உரலில் இடித்துக் கோஜலம் வார்த்துப் பிசைந்து பதரில் உருட்டி அக்கினியில் தகித்துப்புநிதமாக எடுத்து வைப்பதே அநுகற்பவிபூதியாகும். பெருவனம் இயற்கையாகப் பற்றிக்கொண்டதில் நேரிட்ட சாம்பற்பொடியை எடுத்துவந்து பால், தயிர், நெய், கோஜலம், கோமயம் என்னும் பஞ்சகவ்வியம்விட்டுப் பிசைந்து, அக்கினியில் தகித்துப் புநிதமாக எடுத்து வைப்பதே உபகற்பவிபூதியாம். இவ்வாறு உண்டுபண்ணும் விபூதி நீலநிறமாயிருக்கில் வியாதியும், கருமைமிகுந்து சிவந்திருக்குமாகில் ஆயுள் குறையும். செம்மை நிறமாகில் புகழ்நீங்கும். மஞ்சள் நிறமாகில் வறுமை உண்டாகும். வெண்மை நிறமாயின் புண்ணியமுண்டாகும்.

பட்டுவஸ்திரம், பெண்மான்தோல், புலித்தோல் இவைகளில் எதையாவது விபூதிப்பையாகத் தைத்துக் கொள்ளலாம். விபூதிப்பை பன்னிரண்டங்குல நீளமும், எட்டங்குல அகலமுமாக இருக்கவேண்டும். விபூதிப்பை நேரிடாவிடில் சம்புடம், வாழைப்பட்டை, மான்தோல், வியாக்கிரசர்மம் வில்வக்குடுக்கை, சுரைக்குடுக்கை, இவைகளிலும் வைத்துக் கொள்ளலாம். விபூதிதரிக்கும்விதி: காலையில் கிழக்குமுகமாகவும், மாலையில் வடக்குமுகமாகவும், ஆசாரியர் மூலமாய்த் தெரிந்த மந்திரங்களை யுச்சரித்துக்கொண்டு ஜலம் விட்டுக் கவசமந்திரங்களை உச்சரித்துக்குழைத்துச சிரசு, நெற்றி, மார்பு, நாபி, வலதுமுழந்தாள், இடதுமுழந்தாள், வலதுபுஜம், இடதுபுஜம், வலதுமுழங்கை, இடதுமுழங்கை, கணுக்கை இரண்டு, விலாப்புறம் இரண்டு, முதுகு, கழுத்து ஆகிய பதினாறிடங்களிலும் தரித்துக்கொள்ளவேண்டும், இவைகளில் விலாப்புறம் நீக்கிக்காதுகளைக் கொள்வதுமுண்டு. முழங்கைகளையும் மணிக்கட்டுகளையும் நீக்கிப்பன்னிரண்டு ஸ்தானங் கொள்வதுமுண்டு. அப்படித்தரிக்கும் விபூதியின் அளவு நெற்றியில் கடைப்புருவ மளவும், மார்பு புயங்களில் அவ்வாறங்குல நீளமும், மற்ற ஸ்தானங்களில் ஒவ்வோரங்குல நீளமுமிருக்கவேண்டும். ஒன்றுடன்ஒன்றுசேரலாகாது. எந்தசத்கர்மங்களைஆரம்பித்தாலும் விபூதிதரித்துப் பின்பு ஆரம்பிக்கவேண்டும். சுவாமி சந்நிதியிலும், யாகசாலையிலும், ஆசாரியர் முன்னிலும் தரிக்காமல் வேறுதிக்கு முகமாகத் தரிக்கவேண்டும். விபூதி உயிர்க்குற்றங்களை நீறுக்குதலால் திருநீறென்றும், சம்பத்தைக்கொடுத்தலால் பூதியென்றும் ஆகமங்களில் சொல்லப்படும்.

உருத்திராக்கமான்மியம்.

உருத்திராக்க நிறம் வெண்மை பிரமகுலமென்றும், செம்மை க்ஷத்திரியகுலமென்றும், பொன்னிறம் வைசியகுலமென்றும், கருமை சூத்திரகுலமென்றும் சொல்லப்படும். உருத்திராக்கபேதங்கள் ஒருமுகம் முதலாகப் பதினாறுமுகம் வரையிலுமிருக்கின்றன. இவைகளில் முப்பத்திரண்டுமணி மாலையாகத் தரித்துக்கொண்டாலும். அல்லது தனியே ஒருமணி தரித்தாலும், பாபம் நீங்கிப் புண்ணியம் பெறுவார்கள். இவைகள் சிவரூபமாதலால் சிவபெருமானாகவே பிரீதி பாராட்டவேண்டும். ஜெபமாலைக்கு மணி நூற்றெட்டு; ஐம்பத்துநான்கு, இருபத்தேழு, இவைகள் ஒன்றுடன் ஒன்றுசேராமல் முடிந்து மாலையாகவைத்து ஜெபிக்கவேண்டும். இஷ்டசித்தியை விரும்பினோர் இருபத்தைந்து முப்பதுமணிசேர்ந்த மாலை தரிப்பதும் உண்டு. ஜெபிப்பது சிவாலயத்திலாகில் விசேஷ புண்ணிய முண்டாம். காசிமுதலிய க்ஷேத்திரங்களில் தேவர்களாலும் அவுணர்களாலும் பூசிக்கப்பட்டஇலிங்கங்களில் பாணாசுரனால் பூசிக்கப்பட்ட இலிங்கங்களை வருணாச்சிரமத்துக் கேற்றவைகளாகக் கொண்டேத்து மாலையாகத்தரித்து வெண்மைநிற விபூதியுந்தரித்து விதிப்படி பூசிப்பாராயின் மோக்ஷம் அடைவரென்பது சத்தியம்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த க்ஷேத்திரத்தின் மகிமையை நைமிசாரணிய வாசிகளுக்கு சூதபுராணிகர் சொல்லிய புராணத்தைக் கூறுவோமாக. ஓம். சுபம்! சுபம்.

திருக்கழுக்குன்றத் தலமகிமை

முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

திருக்கழுக்குன்றத் தலபுராணச் சுருக்கம்.

காருடச்சருக்கம்.

ஆதியாயனைத்துமாகி யவைகடந்தப்பாலாகி
சோதியாயெங்குந்தானே சுயம்ப்ரகாசமாயோங்கி
நீதியாயன்பர்தங்கள் நினைவினிலமர்ந்துநாளும்
பேதியாதருள்பொழிந்த பிரணவப்பொருளே போற்றி.

சூதபுராணிகர் நைமிசாரண்ய வாசிகளை நோக்கிக் கூறுகின்றார்.

திருக்கயிலாயத்தில் எழுந்தருளியிருக்கின்ற சிவபிரானை வணங்கு நிமித்தம், விஷ்ணுதேவர் கருடவாகனமீது ஆரோகணித்துத் திருக்கயிலாயச்சாரவில்இரங்கி, முதற்கோபுரவாயிலில் கருடபகவானை நிறுத்தித் திருநந்திதேவர் அநுமதிபெற்று, உள்ளேபோய் ஸ்ரீகயிலாயபதியைத் தரிசித்தனர். முதற்கோபுரவாயிலிலிருந்த கருடன் வழக்கப்படி திருநந்தி தேவரைப்பணியாமல் அகங்கரித்திருப்பதை நந்தியெம்பெருமானறிந்து கருடதேவரைப்பார்க்க, இரந்துண்பவன் வாகனமான உன்கோபம் என்னை யாது செய்யுமென்று கருடபகவான் கூற, இச்சிவநிந்தையைக்கேட்ட நந்தியெம்பெருமான் பெருங்கோபங்கொண்டனர். புவனங்களியாவும் அதிர்ந்தன. இனியென்ன விளையுமோவென்று தேவர் நடுங்கினார்கள்; சிவநிந்தையால் கருடன்யாதனாதேகத்தோடு பெருந்துயருறாமல் இப்போதே தண்டிக்கவேணுமென்று நந்திதேவர் நினைந்து பெருமூச்சுவிட்டனர். நாசியின்வழியாய்வந்தசுவாசமாகியபிரசண்டமாருதமானது கருடதேவரை நூறுயோசனை தூரம் உருட்டிக்கொண்டுபோனது. உள்ளேவாங்கும்சுவாசத்தால் நந்திதேவர் நாசிவரையில் உருண்டுவந்து சரீரம் நுறுங்கிப் பெருந்துயரடைந்து, மகா விஷ்ணுவைக்குறித்துக் கருடன் முறையிட்டார். விஷ்ணுபெருமானறிந்து கருடனை உபாதிசெய்யாமல் விடும்படி சிவபிரானுடைய அநுமதி பெற்று வந்து, நந்திதேவருக்குத் தெரிவித்தனர். சிவநிந்தைசெய்த இத்தேகத்தை வைக்கலாகாதென்று கருடன்மீது மறுபடியுங் கோபிக்க, விஷ்ணுதேவர் சிவசந்நிதியடைந்து, தேவரீர் விடும்படி கட்டளையிட்டதாகக்கூறியும்,நந்திதேவர் கருடனை உபாதிசெய்கின்றனரென்று சொல்லச் சிவபெருமான் நந்திதேவரை வரவழைத்து, நமது கட்டளைக்கு மேலுங் கோபங்கொள்ளலாமோ வென்று திருவாய்மலர, சிவவாக்கியத்தை ஆலோசியாமல் தனக்குக் கோபம் வந்ததைக் திருநந்திதேவர் நினைந்து, சரீரம் நடுங்கி அடியேன் தேவரீர் வாக்கியத்தைத்தடுத்த அபராதத்தை மன்னித்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனர். பின்பு கருடதேவர் சிவானுக்கிரகத்தால் சரீரசௌக்கிய மடைந்தனர்.

வேதகிரிச்சருக்கம்.

சிவவாக்கியத்தைத் தடுத்த நந்திதேவர் பணிந்து, சிவபிரான் திருவுளமிரங்கி வேதகிரியென்று ஓர் தலமிருக்கின்றது. பூர்வம் வேதங்கள் நம்மைப் பூஜித்து ஆறு அங்கங்களுடன் ஒன்றுசேர்ந்து நமது திருவடியின்கீழ் நிலைத்திருக்கவேண்டுமென்று பிரார்த்திக்கப் பூலோகத்தில் ஒரு கிரிவடிவமாக நிற்பீர்களானால் அம்மலையினுச்சியில் நாம் ஒரு சிவலிங்கவடிவமாகத் திருவுருக்கொள்வோம். அதனால் உங்களுக்குவேதகிரியென்று பெயருண்டாகுமென்று கட்டளையிட்டோம். அவ்வண்ணமே இருக்குவேதம் வேராகவும், யசுர்வேதம் மத்தியாகவும், சாமவேதம் அடியாகவும், அதர்வணவேதம் சிகரமாகவும், சந்தையென்பது பொன், வெள்ளி, இரும்பு, செம்பு, ஈயம், வெண்கலம், தரா என்னும் தாதுக்களாகவும், கற்பம் அம்மலைக்கு கைகளாகவும், மீமாம்சை தாழ்வறையாகவும், உபநிடதம் விருக்ஷங்களாகவும், நிருத்தம் அருவிகளாகவும், சோதிடம் மணிகளாகவும், சிவாகமம் நாற்புறத்திலுமுள்ள சாரல்களாகவும் விளங்குவனவாம். தலங்களுக்குள் அதுவிசேஷமாகும் என்று நந்திதேவருக்குச் சிவபிரான் திருவாய்மலர்ந்தருளினர்.

உருத்திரகோடிச்சருக்கம்.

இவ்வாறு கட்டளையிட்ட பரமசிவத்தை நந்தியெம்பெருமான் வணங்கி வேதகிரித்தலத்தில் கோடிருத்திரர்கள் பூசைசெய்தகாரணத்தையும்,அடியேனுக்குத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று பணிந்துகேட்கப் பரமசிவம் கட்டளையிடுகின்றார். பூர்வம் உலகத்தினிடத்து அனேக இராக்ஷதர்கள் பரவித்துன்பஞ் செய்துகொண்டிருந்தார்கள். அவர்களை நாசப்படுத்தும்படி நமது திருமேனியில் கோடி ருத்திரர்களை உண்டாக்கினோம். அவர்கள் நமக்குச் சமானமான வல்லமையையுடையவர்கள். அவுணர்களை நாசஞ்செய்து உலகங்களுக்கு க்ஷேமத்தை யுண்டு பண்ணுவீர்களென்று தெரிவித்தோம். அசுரர்களைக்கொன்று உலகங்களுக்குக்ஷேமமுண்டுபண்ணி அக்கோடிருத்திரர்களும் பின்பு கயிலாயத்தை யடைந்து தவஞ் செய்துகொண்டிருந்தனர். அக்காலததில் விஷ்ணுதேவர் திருப்பாற்கடல் கடைய மத்தாக மந்தரகிரி எடுத்தபாதாளவழியாக. அனேகராக்ஷதக் கூட்டங்கள் வெளிப்பட்டு உலகங்களில் பாவினதைகண்ட தேவர்களும் முனிவர்களும் பயந்து, கயிலைக்கு வந்து முறையிட்டார்கள். அப்போது நாம் முன்பு உண்டாக்கின கோடி ருத்திரர்களைப் பார்த்து அசுரர்களால் நேரிடும் துன்பத்தை நிவர்த்தியுங்களென்று கட்டளையிட்டோம். அக்கோடி ருத்திரர்களும் பணிந்து சுவாமி! இப்போது அவர்கள் பாபகிருத்தியங்களைச் செய்தாலும், பூர்வம் விசேஷ புண்ணியங்களைச்செய்து தவம்புரிந்தவர்களாதலால், அவர்களைக்கொல்லும் பாபம்தொடராதபடி அநுக்கிரகஞ்செய்யவேணுமென்றுகேட்டார்கள். வேதகிரித் தலத்தில் நம்மை நீங்கள் பூஜித்தால் பாபம் நிவர்த்தியென்று கட்டளையிட்டோம். இராட்சதர்களைத் துவம்சஞ்செய்து வேதகிரித்தலத்தை யடைந்து பணிந்தார்கள். அவர்களுடைய அன்பிற்குவந்து நாம் கோடிலிங்கமாக

வருக்கொண்டோம். அவ்விலிங்கங்களை அவர்கள் அர்ச்சனை செய்தபோது, நாம் பிரசன்னமாய் நீங்கள் விரும்பியது யாதென்றுவினவ, இன்றுமுதலாக இத்தலம் உருத்திரகோடித்தலமென்றும், தேவரீருக்கு உருத்திரகோடிநாத ரென்றும் பெயர் வழங்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டபடி அனுக்கிர கித்து, அவர்களை நமது திருமேனியில் ஐக்கியஞ்செய்துகொண்டோம். அது முதல் அத்தலம் உருத்திரகோடியென்றும் வழங்குகிறதென்று நந்திதேவருக் குச் சிவபெருமான் திருவாய்மலர்ந்தனர்.

நந்திதவச்சருக்கம்.

நந்தியெம்பெருமான், சிவபெருமானிடம் அனுமதி பெற்றுக்கொண்டு வேதகிரித்தலத்தின் சிகரத்தைக்கண்டு மனங்கசிந்துருகி, சிரம், வலது அஸ் தம், இடது அஸ்தம், வலது கன்னம், இடதுகன்னம், முகவாய், வலதுபுஜம், இடதுபுஜம் என்னும் அஷ்டாங்கங்களும் பூமியிற்படிய நமஸ்கரித்து, வேத கிரியைச் சேர்ந்து, மேர்குத்திசையில் வேதகிரியின் சாயல் தோற்றும் ஒரு தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து பூசித்து, இடபிங்கலையாகிய இரண்டு வழியை யடைத்து, சுழிமுனைநாடிவழியைத்திறந்து, அவ்விடத்திற் காணப்படும் கோடி சூரியப்பிரகாசத்தையுந் தரிசித்துத் தசவித நாதவொலிகளைக்கேட்டு லலாட ஸ்தானத்தில் சந்திரமண்டலத்திலிருந்து பெருகுகின்ற அமிர்தத்தைப் பானஞ்செய்து, பிரம்மாநந்தபராய்ச் சிவயோகத்தில் எழுந்தருளியிருந்த னர். இவ்விதமாக நெடுங்காலந் தவஞ்செய்த நந்திதேவர் வைராக்கியத்தை வெளிப்படுத்தும்படி சிவபெருமான் தேவேந்திரனுக்குக் கட்டளையிட, இந் திரன் திலோர்த்தமை முதலிய தேவகணிகையர்களைத் தவஞ்செய்யும் நந்தி தேவரிடம் அனுப்பினன். அத்தேவதாசிகள் வேதகிரித்தலத்திற் சேர்ந்து, இடப ரூபங்கொண்ட திருநந்திதேவரைக்கண்டு, அதிசவுந்திர விசித்திர திரு வுருவைப்பார்த்துப் பெருங்காதல் கொண்டு, கிடாரிவடிவ மெடுத்தார்கள். நந்திதேவருடைய தேகத்தைத் தனது உடம்போடு உறைந்து, காமசங்கல்பம் உண்டாகும்படி திலோர்த்தமை செய்ய, யோகத்தில் நின்றும் பிரிந்து பெருங் கோபத்தை அடக்கிக் கண்விழித்துப் பார்த்து திலோர்த்தமையே! உனக்கு இந்தக் கிடாரிவடிவம் நிலைபெறக்கடவதென்று சாபங்கொடுத்தனர். திலோர் த்தமை நடுநடுங்கிச் சுவாமீ! அடியேன் செய்த அபராதத்தை மன்னித்தருள வேண்டும் என்று கதறி அழுது திருவடியில் வீழ்ந்தாள். நந்திதேவர் மனமிரங் கிக் கலியுகத்தில் மகாபலிபுரமென்னும் நகரத்திலிருந்து சுரகுரு வென்னும் சூரியவமிசத்தரசன் வனத்தில் வேட்டையாடும்போது, மாயீகன் என்னும் பன்றியின்மேல்விடும் பாணசேஷமானது உன்மேற்படும். நீ இறந்து திவ்விய சரீரத்தோடு சுவர்க்கமடையக்கடவாயென்று திருவாய் மலர்ந்து, யோகத்தி ருந்தனர். சாபமடைந்த திலோர்த்தமை பசுவடிவத்தோடு வனத்தில் மேய் ந்து அலைந்து திரிந்தனள். சிவபெருமான் திருநந்திதேவருக்கு அனுக்கிரகஞ் செய்யும் பொருட்டு நந்திதேவர் முன் ஆகாயவீதியில் எழுந்தருளியதைக் கண்ட தேவர்கள் கற்பகப்பூமாரி பெய்தார்கள். நந்திதேவர் கண்விழித்துப்

பணிந்து தோத்திரஞ்செய்து ஆநந்தக்கூத்தாடினர். சிவபெருமான் உனக்கு வேண்டிய வரங்கேளென்று திருவாய்மலர, எவராவது இத்தலத்தில் வந்து தேவரீரைப் பூசித்தால் அவர்கள் திருக்கயிலாயபதம் அடையும்படிக்கும், இத்தலத்திற்கு நந்திபுரியென்றும், தேவரீரெழுந்தருளிய வேதகிரிக்கு நந்திகிரியென்றும் நான் ஸ்நானஞ்செய்த தீர்த்தத்திற்கு நந்திதீர்த்தமென்றும் திருநாமம் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டபடி அனுக்கிரகித்தனர். இடபாருபங்கொண்ட நந்தியெம்பெருமான் சிவபிரானைத் தாங்கிக்கொண்டு வேதகிரிக்கெழுந்தருளினர்.

கங்காசலச் சருக்கம்.

(இ-ள்.) கங்கம்-கழுகு, அசலம்-மலை, கழுகு பூசிக்கும் மலை.

சண்டன், பிரசண்டன் பூசித்த சரித்திரம்.

சான்மலி நாட்டில் திரேதாயுகத்திலே விருத்தசிரவாவென்கிற மகா முனிவருடைய நெற்றியில் சண்டன் என்கிற முனிவரும், மார்பில் பிரசண்டன் என்கிற முனிவரும், கழுகுவடிவாக அவதரித்தார்கள். அவர்களைப் பிதா பார்த்துச் சமஸ்தபட்சிகளுக்கும் அதிபதியாவீர்களென்றனர். அவர்களதை வெறுத்து வேதகிரிநாதரைப் பூசிக்கவேண்டிய விதிகளைத் தெரிந்து, வேதகிரிக்கு வந்து பூசித்து, அந்த யுகமுடிவில் பெருமானோடு இரண்டறக்கலந்தனர்.

சம்பாதிசடாயு பூசித்த சரித்திரம்.

இரண்டாவது திரேதாயுகத்தில் சம்பாதி சடாயுவென்னும் இரண்டு முனிவர்கள் பூர்வ வினையால் கழுகுவடிவமாகப் பிறந்தார்கள். சம்பாதியென்பவர் தம்பியாகிய சடாயுவைப்பார்த்து உன்னிலும் நானே வலிமையுடையேனென்றனர். தம்பி தமயனைப்பார்த்து உன்னிலும் நானே வலிமையுடையேனென்றனர். இவ்வண்ணம் இருவரும் வாதித்துப் பின்பு நாம் இருவரும் சூரிய மண்டலத்தை நோக்கிப்பறந்து செல்வோம். யார் முன்னே சூரியமண்டலத்தை யடைகின்றார்களோ அவர்களே பராக்கிரமத்தில் உயர்ந்தவர்களென்றுதமும் நிச்சயித்து, முனிகணங்களைச் சாட்சியாக வைத்து மேருப்பர்வத உன்னத சிகரத்திலிருந்து ஆகாயத்தைநோக்கி யிருவரும் ஒரே காலத்தில் எழும்பிப் பறந்தார்கள். அதனால் சூரியனுக்கருகிருக்கும் அம்சமஹாரிஷியின் சாபத்தையடைந்து, வேதகிரித்தலத்தைப் பூசித்து, அந்த யுகமுடிவில் பெருமானோடு இரண்டறக்கலந்தனர்.

சம்புகுத்தன், மாகுத்தன் சரித்திரம்.

துவாபரயுகத்தில் சம்புகுத்தன் மாகுத்தன் என்னும் முனிவர்கள் வேதகிரியில் தவஞ்செய்தார்கள். தமயனாகிய சம்புகுத்தன் சிவமேபெரிதென்றான். தம்பியாகிய மாகுத்தன் சத்தியே பெரிதென்றான். சிவமேபெரிதென்றவனை

சிவபெருமானும், சத்தியே பெரிதென்றவனைத் திரிபுராம்பிகையும் கழுகாகச் சாபங்கொடுக்க, அத்தலத்தில் பூசித்து அந்த யுகமுடிவில் சிவபெருமானோடு இரண்டறக்கலந்தனர்.

சம்பு, ஆதி சரித்திரம்.

நாலாவது கலியுகாரம்பத்தில் பூடா விருத்தாவென்னும் இரண்டு முனிவர்கள் வேதகிரித்தலத்தில் தவஞ்செய்தனர். அத்தவத்திற்கு வேதகிரிப்பெருமான் இரங்கிக் காட்சிகொடுத்து நீங்கள் செய்யுந் தவத்துக்கு நாம் மகிழ்ந்தனம். சாருப பதத்தை யிப்போது தருகின்றோம். ஒரு கற்பமட்டும் அச்சரீரத்தோடு திருக்கயிலாசத்தில் வாசஞ்செய்வீர்கள். அதன்பின்பு சாயுச்சியத்தைப் பெறுவீர்களென்று திருவாய்மலர்ந்தனர். அதைக்கேட்ட இரண்டு முனிவர்களும் இப்போதே சாயுச்சியந்தரவேண்டுமென்றனர். நாம் கட்டளையிட்ட வாக்கியத்தை மறுத்தமையால் நீங்கள் கழுகு வடிவங் கொள்வீர்களென்றனர். முனிவர்கள் பயந்து அபராதத்தைப் பொறுத்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, நீங்கள் காசிப ரிஷியினிடத்தில் இரண்டு கழுகுகளாகப் பிறந்து. சம்பு ஆதியென்னும் பெயர்பூண்டு இவ்வேதகிரிக்கு வந்து, கிரியின் மீதுள்ளபாறையில் உங்கள் மூக்கினால் கீறுவீர்கள். அக்கீறல் சுனைவடிவமாகும். அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து பூசைசெய்யுங்கள். கலியுக முடிவில் முத்தியடைவீர்களென்று திருவாய்மலர்ந்தனர். அப்படியே காசிபமுனிவரிடத்தில் கழுகுவடிவமாகப் பிறந்து, * சம்பு, ஆதியென்னும் பெயர் பூண்டு, இப்போதுந் தவஞ்செய்து கொண்டிருக்கிறார்கள். இவ்வண்ணம் யுகங்கள் தோறும் இரண்டிரண்டு பேர்களாக நான்கு யுகத்திற்கும் கழுகுவடிவங் கொண்ட எட்டுமுனிவர்கள் பூசித்த காரணத்தால் அம்மலைக்குக் கழுகாசலமென்று பெயர் வழங்குகின்றது.

பசுவராகச் சருக்கம்.

மகாபலிபுரத்தை யரசாண்ட சுரகுருச்சக்ரவர்த்தி இக்கழுகாசலத்துக்கு அருகிலுள்ள வனத்தில் ஓர் பன்றியை வேட்டையாடினான். விட்டபாணமானது பன்றியைக் கொலைசெய்து, பின்னும் வேகத்துடன்சென்று ஒருபுதருக்கு அப்பால் மேய்ந்துக்கொண்டிருந்த பசுவின்மீதுபட்டு ஊடுருவியது. பசுவாயிருந்த திலோத்தமை பழையவடிவமாகிச் சொர்க்கம் சென்றாள். பன்றியாகிய மாயிகஅரசன் தவஞ்செய்யப் போயினான்.

தீர்த்தச் சருக்கம்.

இவ்வரசனது வேட்டை நாய்களுக்குள் ஓர்நாய் குஷ்டநோய் கொண்டிருந்தது. அதுவேதகிரியின்மேலேறி சுனையிலிருந்த தீர்த்தத்தைக் குடித்தபோது தவறிச் சுனைக்குள் வீழ்ந்தது. அத்தீர்த்தத்தின் மகிமையால் குஷ்டம்

---

* இப்போது நாமெல்லோரும் தரிசிக்கும்படிவரும் கழுகுகள் இவைகளே.

மாறிச் சுவர்ணகாந்தியடைந்தது. குஷ்டமுள்ள மந்திரி அதைக்கண்டு, அந்நாய் போனவழியேபோய்ச் சுனையைப்பார்த்தபோது, அத்தீர்த்தம் புழுக்களால் நிறைந்திருப்பதுபோலத் தோன்றியது. மனதில் அருவருத்து, வாய்க்குள்ளே தீர்த்தம்போகாமல் ஸ்நானஞ் செய்தனன். சரீரமுழுதும் சுவர்ணகாந்தியாகிப் பிரகாசித்தது. வாய்மட்டும் வெண்குஷ்டம் மாறாதிருந்தது. நான் தீர்த்தத்தை அருவருத்தேனாதலால் வாயில் குஷ்டம் நீங்கவில்லையென்று வாயால் தீர்த்தத்தைப் பருகினான். ஆதியில் சந்தேகித்தபடியால் வாயிலிருந்த வெண்குஷ்டம் மாறவில்லை. மந்திரி ஆச்சரியங்கொண்டு அரசனிடம் வந்து, அந்த அற்புதத்தைத் தெரிவித்தனன். அம்மந்திரியை முத்துமணி வெள்வாயனென்று யாவரும் சொல்லினார்கள். பின்பு அரசன் மகாபலிபுரம் போகும்போது இப்போது கழுகுவடிவங்கொண்டு பூசிக்கும் முனிவர்கள் தடுத்து, வேதகிரித்தலத்தின் தீர்த்தமகிமையைத் தெரிவிக்கின்றார்கள். ஆதியில் கங்கைமுதலிய நதிகளெல்லாம் சமுத்திர அரசனிடம் வந்தார்கள். வருணதேவன் கங்கையினிடத்தில் அதிகபிரியங்காட்டினான். மற்றநதிதேவிகள்கண்டு ஊடல்கொண்டனர். கங்கை என்மகிமை உங்களுக்குக் கிடைக்குமோவென்று சொல்ல, ஒருவருக்கொருவர் விரோதித்து வாதஞ்செய்வதை சமுத்திர அரசன் பார்த்து,அவர்களை யழைத்துக்கொண்டுபோய்,கோதாவரி கோடீச்சுரருக்குத் தெரிவிக்க, அக்கடவுள் அந்நதிதேவிகளுடன் உருத்திரகோடி ஸ்தலத்திற்கு வந்து, அங்குள்ள தீர்த்தங்களில் அவர்களை ஸ்நானஞ் செய்வித்தனர். ஸ்நானஞ் செய்தவுடன் தாங்கள் கொண்டபொறாமை நீங்கி, வேண்டிய வரம்பெற்று, வாசஸ்தானத்தை யடைந்தார்கள். வருணதேவனும் வேண்டிய வரம்பெற்றுச் சென்றனர். இத்தலத்தில் அனேக தீர்த்தங்களுள்ளன. அவைகளில்முக்கியம் பன்னிரண்டுதீர்த்தமாகும். திருமலைக்குக்கிழக்கே (மூவர்கோவில் சமீபம்)இந்திரதீர்த்தம். அக்கினி மூலையில்உருத்திராங்கோவிலில் உள்ளது சம்புதீர்த்தம் (உருத்திரகோடிதீர்த்தம்.) வேதமலைக்குத் தெற்கு வசிஷ்ட முனிவராலே உண்டாக்கப்பட்டது சங்குதீர்த்தம். நிருதிமூலையில் மெய்ஞ்ஞானதீர்த்தம்,அகஸ்தியதீர்த்தம்,மார்க்கண்டேய தீர்த்தம்,விஸ்வாமித்திர தீர்த்தம். திருமலைக்கு மேற்கில் நந்திதீர்த்தம். வருணதீர்த்தம் வடமேற்கில் அகலிகா தீர்த்தம். வேதகிரியின் பாறையின்மீது எங்கள் மூக்கினாலே உண்டாக்கப்பட்ட சுனை சம்பாதி தீர்த்தம், இந்த தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்தவர்கள் பாபம்நீங்கிப் பரிசுத்தராவார்கள்.

தல விசேடச் சருக்கம்.

இத்தலம் சிவபுரமென்றும் தக்ஷிணகயிலாயமென்றும் வழங்கும். ஆதியில் சிவபெருமான் திருநந்திதேவரைப்பார்த்து கயிலாசகிரியின் சிகரங்களில் மூன்று சிகரங்கொண்டுபோய் மூன்றிடத்தில் வைப்பாயாக. அம்மூன்றில் ஒருமலையைத் தெரிசித்தாலும் நாம் எழுந்தருளியிருக்கும் கயிலாயத்தைத்தெரிசித்த பலனடைவார்களென்று கட்டளையிட்டனர். நந்தியெம்பெருமான் மூன்றுசிகரங்களையுங்கொண்டுமூன்றிடத்தில் நாட்டினர்.வடக்கே மல்லிகார்ச்

சனபுரம் ஒன்று, திருக்காளத்திமலை ஒன்று, திருக்கழுக்குன்றம் ஒன்று. இத்தலத்திற்கு வருபவர் ஸ்நானஞ்செய்து நியமமாக வந்து நந்திதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து ஸ்தலபுராணத்தை வாசித்துக்கொண்டாயினும் கேட்டுக்கொண்டாயினும் மெல்ல நடந்து, வேதகிரியையைந்து தரமாயினும் மூன்றுதரமாயினும் பிரதக்ஷிணஞ் செய்யவேண்டும். தீர்த்தக்கரை முதலான இடங்களில் தாம்பூலம் உமிழலாகாது. மற்ற அசுசிகளையும் செய்யலாகாது என்று கழுகு முனிவர்கள் சுரகுருச்சக்கிரவர்த்திக்குக் கூறினர்.

சுரகுருச் சருக்கம்.

இதைக்கேட்ட இச்சுரகுரு அரசன் முத்துமணி வெள்வாயனென்னும் தன்மந்திரியோடு சங்குதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, கிரிப்பிரதக்ஷிணம் வந்து, மலையடிவாரத்தில் ஓர் சிவலிங்கப் பிரதிட்டை செய்தனன். அவ்விலிங்கம் சுருகுரு லிங்கமெனப் பெயர்பெறும். பிறகு மலையினுச்சியிலேறி, வேதகிரி நாதரைத் தூரத்திற்கண்டு துதித்தனன். வேதகிரி நாதர் கடாட்சத்தால் அவ்வரசன்செய்த தீவினைகளும், அநாதியாயுள்ள ஆணவ மலமும் நீங்கி, அநேகங் கருங்காக்கை வடிவங்கொண்டு அவன் தலையின்வழியாகவும் உரோமத்துவாரத்தின் வழியாகவும் வெளிப்பட்டு, பேரிரைச்சலுடன் மேலெழும்பிப்பறந்து, அவ்வேதமலைக்குத் தெற்கில்வீழ்ந்து, ஓர் மலைவடிவமாயின. அம்மலைக்குக் காக்கைக்குன்றென்று வழங்கிவருகின்றது, அரசனும் மந்திரியும் இஸ்தலமகிமையை அநுபவமாகப்பார்த்து, மலைவிட்டிறங்கி, மறுபடியும் ஐந்துமுறை கிரிப்பிரதக்ஷிணஞ்செய்து, கோகத்திப்பாபம் நீங்கும் வண்ணம் காடுகளை வெட்டி, பூமியைத்திருத்தி நந்திதீர்த்தத்திற்குப் படிகட்டிவித்துப் பக்தவற்சலேஸ்வரரென்னும் ஒரு சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்து, ஆகமவிதிப்படி உற்சவாதிகளை நடப்பித்துக் கழுகு முனிவருடைய அநுக்கிரகத்தைப்பெற்று, மகாபலிபுரத்தை யடைந்து, சிலநாளிருந்து திருக்கயிலாய பதம் பெற்றனர்.

இத்தலபுராணச் சுருக்கத்தை வாசித்தவர்களும், கேட்டவர்களும், வாசிக்கச் சொன்னவர்களும் சிவபுண்ணியப் பேறடைவார்களென்பது திண்ணம். ஓம்! சுபம்!! சுபம்!!!

திருச்சிற்றம்பலம்.

திருக்கழுக்குன்றத் தலபுராணச் சுருக்கம்

முற்றிற்று.

☞ இச்சுருக்கத்தை திரட்டித் திருத்திப்பதிப்பித்தவர்
சிவராஜயோகி யென்னும் சை. ர. நமசிவாய செட்டியார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருக்கழுக்குன்றத் தேவாரம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

பண் - நட்டபாடை.

அருச்சனை.

திருச்சிற்றம்பலம்.

கொன்றுசெய்த கொடுமையாற்பல சொல்லவே
நின்றபாவ வினைகடாம்பல நீங்கவே
சென்றுசென்றுதொழுமின்றேவர் பிரானிடங்
கன்றினோடுபிடி சூழ்தண்கழுக் குன்றமே. (௧)

இறங்கிச்சென்றுதொழுமி னின்னிசை பாடவே
பிறங்குகொன்றைச்சடைய னெங்கள் பிரானிட
நிறங்கள்செய்தமணிக ணித்திலங்கொண்டிழி
கறங்குவெள்ளையருவித் தண்கழுக் குன்றமே. (௨)

நீளநின்றுதொழுமி னித்தலுநீதியா
லாளுநம்மவினைக ளல்கி யழிந்திடத்
தோளுமெட்டுமுடைய மாமணிச்சோதியான்
காளகண்டனுறையுந் தண்கழுக் குன்றமே. (௩)

வெளிறுதீரத்தொழுமின் வெண்பொடியாடியை
முளிறிலங்குமழுவாளன் முந்தியுறைவிடம்
பிளிறுதீரப்பெருங்கைப் பெய்ம்மதமூன்றுடைக்
களிறினோடுபிடிசூழ் தண்கழுக் குன்றமே. (௪)

புலைகடீரத்தொழுமின் புன்சடைப் புண்ணிய
னிலைகொள்சூலப்படைய னெந்தைபிரானிட
முலைகளுண்டுதழுவிக் குட்டியொடுமுசுக்
கலைகள்பாயும்புறவிற் றண்கழுக் குன்றமே. (௫)

மடமுடையவடியார் தம்மனத் தேயுற
விடமுடையமிடறன் விண்ணவர் மேலவன்
படமுடையவரவன் றான்பயிலு மிடங்
கடமுடையபுறவிற் றண்கழுக் குன்றமே. (௬)

ஊனமில்லாவடியார் தம்மனத்தேயுற
ஞானமூர்த்தி நட்டமாடி நவிலுமிடங்

தேனும்வண்மெதுவுண் டின்னிசை பாடியே
கானமஞ்ஞையுறையுந் தண்கழுக் குன்றமே. (எ)

அந்தமில்லாவடியார் தம்மனத் தேயுற
வந்துநாளும் வணங்கிமாலோடு நான்முகன்
சிந்தைசெய்தமலர்க ணித்தலுஞ்சேரவே
சந்தநாறும்புறவிற் றண்கழுக் குன்றமே. (அ)

பிழைகடாத்தொழுமின் பின்சடைப்பிஞ்ஞகன்
குழைகொள்காதன் குழகன்றானுறையும்மிட
மழைகள்சாலக்கலித்து நீடுயர்வேயவை
குழைகொண்முத்தஞ்சொரியுந் தண்கழுக் குன்றமே. (கூ)

பல்லில்வெள்ளைத் தலையன்றான் பயிலும்மிடங்
கல்லில்வெள்ளையருவித் தண்கழுக்குன்றினை
மல்லின்மல்கு திரடோளூரன் வனப்பினாற்
சொல்லல்சொல்லித்தொழு வாரைத் தொழுமின்களே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்.

பண் - குறிஞ்சி,

திருச்சிற்றம்பலம்.

தோடுடையானொருகாதிற்றூய குழைதாழ
வேடுடையான்றலைகலனாக விரந்துண்ணு
நாடுடையானள்ளிருளேம நடமாடுங்
காடுடையான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. (க)

கேணவல்லான்கேழல் வெண்கொம்பு குறளாமை
பூணவல்லான்புரிசடைமேலோர் புனல்கொன்றை
பேணவல்லான்பெண்மகடன்னை யொருபாகம்
காணவல்லான்காதல்செய்கோயில் கழுக்குன்றே. (உ)

தேனகத்தார்வண்டதுவுண்ட திகழ்கொன்றை
தானகத்தார்தண்மதிசூடித் தலைமேலோர்
வானகத்தார்வையகத்தார்க டொழுதேத்துங்
கானகத்தான்காதல்செய்கோயில் கழுக்குன்றே. (ங)

துணையல்செய்தான்றூயவண்டியாழ்செய் சுடர்க்கொன்றை
பிணையல்செய்தான் பெண்ணினல்லாளையொருபாக
மிணையல்செய்யாவிளங்கெயின்மூன்று மெரியுண்ணக்
கணையல்செய்தான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. (ச)

பையுடைய பாம்பொடுநீறு பயில்கின்ற
மெய்யுடையான் வெண்பிறைசூடி விரிகொன்றை
மையுடைய மாமிடற்றண்ணல் மறிசேர்ந்த
கையுடையான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. (௫)

வெள்ளமெல்லாம் விரிசடைமேலோர் விரிகொன்றை
கொள்ளவல்லான் குரைகழலேத்துஞ் சிறுத்தொண்ட
ருள்ளமெல்லாமுள்கி நின்றாங்கேயுடனாடுங்
கள்ளம்வல்லான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. (௬)

ஆதல்செய்தானரக்கர்தங்கோனை யருவரையி
னோதல்செய்தானொடிவரையின்கண் விரலூன்றிப்
போதல்செய்தான்பெணமகடன்னோ டொருபாகங்
காதல்செய்தான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. (௭)

இடந்தபெம்மானேனமதாயு மனமாயுந்
தொடர்ந்தபெம்மான்றூமதி சூடிவரையார்தம்
மடந்தைபெம்மான் வார்கழலோச்சிக் காலனைக்
கடந்தபெம்மான்காதல் செய்கோயில் கழுக்குன்றே. (௮)

தேயநின்றான்றிரிபுரங்கங்கை சடைமேலே
பாயநின்றான்பலர்புகழ்ந்தேத்த வுலகெல்லாஞ்
சாயநின்றான்வன்சமண்குண்டர் சாக்கியரக்
காயநின்றான்காதல்செய்கோயில் கழுக்குன்றே. (௯)

கண்ணுதலான்காதல்செய்கோயில் கழுக்குன்றை
நண்ணியசீர் ஞானசம்பந்தன் றமிழ்மாலை
பண்ணியல்பாற்பாடியபத்து மிவைவல்லார்
புண்ணியராய்விண்ணவரோடும் புகுவாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு சுவாமிகள்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

மூவிலைவேற்கையானை மூர்த்திதன்னை முதுபிணக்காடுடையானைமுதலானானை, ஆவினிலைந்துகந்தானையமரர்கோனை யாலாலமுண்டுகந்தவையன்றன்னைப், பூவின்மேனான்முகனுமாலும்போற்றப்புணர்வரியபெருமானைப்புனிதன்றன்னைக், காவலனைக்கழுக்குன்றமமர்ந்தான்றன்னைக் கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனானே. (௧)

பல்லோடுதலைசடைமேலுடையான்றன்னைப் பாய்புலித்தோ லுடையானைப்பகவன்றன்னைச், சொல்லோடுபொருளனைத்துமானான்றன்னைச்சுடருருவிலென்பருக்கோலத்தானை, அல்லாதகாலனைமுன் னடர்த்தான்றன்னை யாலின்கீழிருந்தானையமுதானானைக், கல்லாடைபுனைந்தருளுங்காபாலியைக் கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனானே. (உ)

திருச்சிற்றம்பலம்.

உ, ந, ச, ரு, சு, எ, அ, கூ, இவைகள் வீடுற்றன.

ஸ்ரீமந் மாணிக்கவாசக சுவாமிகள்.

திருச்சிற்றம்பலம்.

பிணக்கிலாதபெருந்துறைப்பெரு மானுன்னாமங்கள்பேசுவார்க்
கிணக்கிலாததோரின்பமேவருந் துன்பமேதுடைத்தெம்பிரா
னுணக்கிலாததோர்வித்துமேல்விளை யாமலென்வினையொத்தபின்
கணக்கிலாத்திருக்கோலநீவந்து காட்டினாய்கழுக்குன்றிலே. (க)

பிட்டுநேர்படமண்சுமந்த பெருந்துறைப்பெரும்பித்தனே
சட்டநேர்படவந்திலாத சழக்கனேனுனைச்சார்ந்திலேன்
சிட்டனேசிவலோகனேசிறு நாயினுங்கடையாயவெங்
கட்டனேனையுமாட்கொள்வான்வந்து காட்டினாய்கழுக்குன்றிலே. (உ)

மலங்கினேன்கண்ணினீரைமாற்றி மலங்கெடுத்தபெருந்துறை
விலங்கினேன்வினைக்கேடனேனினி மேல்விளைவதறிந்திலே
னிலங்குகின்றநின்சேவடிகளிரண்டும்வைப்பிடமின்றியே
கலங்கினேன்கலங்காமலேவந்து காட்டினாய்கழுக்குன்றிலே. (ந)

பூணொணாததோரன்புபூண்டு பொருந்திநாடொறும்போற்றவு
நாணொணாததோர்நாணமெய்தி நடுக்கடலுளழுந்திநான்
பேணொணாதபெருந்துறைப்பெருந் தோணிபற்றியுகைத்தலுங்
காணொணாத்திருக்கோலநீவந்து காட்டினாய்கழுக்குன்றிலே. (ச)

கோலமேனிவராகமேகுண மாம்பெருந்துறைக்கொண்டலே
சீலமேதுமறிந்திலாதவென் சிந்தைவைத்தசிகாமணி
ஞாலமேகரியாகநானுனை நச்சிநச்சிடவந்திடுங்
காலமேயுனையோதநீவந்து காட்டினாய்கழுக்குன்றிலே. (ரு)

பேதமில்லதொர்கற்பளித்த பெருந்துறைப்பெருவெள்ளமே
யேதமேபலபேசநீயெனை யேதிலார்முனமென்செய்தாய்
சாதல்சாதல்பொல்லாமையற்ற தனிச்சரண்சரணாமெனக்
காதலாலுனையோதநீவந்து காட்டினாய்கழுக்குன்றிலே. (சு)

இயக்கமொரு றபத்தூரால்வரை யெண்குணஞ்செய்தவீசனே
மயக்கமாயதொர்மும்மலப்பழ வல்வினைக்குளழுந்தவுந்
தயக்கறத்தெனையாண்டுகொண்டுநின் றாய்மலர்க்கழறந்தெனைக்
கயக்கவைத்தடியார்முனேவந்து காட்டினாய்கழுக்குன்றிலே. (எ)

திருச்சிற்றம்பலம்.

பட்டினத்தடிகள்.

காடோ செடியோ கடற்புறமோ கனமேமிகுந்த
நாடோ நகரோ நகர்நடுவோ நலமேமிகுந்த
வீடோ புறந்திண்ணையோ தமியேனுடல் வீழுமிடம்
நீடோய் கழுக்குன்றி லீசாவுயிர்த்துணை நின்பதமே.

சிதம்பரசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

வேதகிரீசுரர் பதிகம்.

நெடுங்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மேருவிலாய திணைர வாயொருவெங்கணை மாலரியாய்
விரிதலையுலகர் தேரா யதிலுற மிகுசக டிருசுடராய்
ஆரணநாலும் பரியா யம்புய னமைவுறு சாரதியா
வவைந்புற் றிகலழியா முப்புர மட்டிடு மன்றாளிற்
சேருறு மூவர்க ளழியா துன்னடி சேராநின்றனராற்
சிந்தையி லுன்றனை மறவாதவர்தமைத்தேறுவாரெவரேகாண்
வேரிநறுந்தொடை மாதொருபங்குறை வெற்பேகற்பகமே
வேதகிரிப்பவ ரோகவயித்திய வேணிமுடிக்கனியே. (க)

ஆகாயாதிய நாலும்மிரு மங்கியினுறகூறு
மவையுட் பயமொன் றகலச்சொலுமவை யாமின்பெனவெண்ணி
யேகாதறுபய மொன்றூர்துன்பென்றெணியிச் சுகதுன்பத்
திடையே படிவேறுனையே நினையேனென் றன்னருள்பெறுவேன்
மோகாதிகளுற பிறவிக்கடலின் மூழ்கா துன்னருளா
மூரிக்கப்பலிடத்தே வைத்தெனை முத்திக்கரையுய்க்கு
மீகாமனெனிக ராகியவொருவா மிருபூரணசொருபா
வேதகிரிப் பவரோகவயித்திய வேணிமுடிக்கனியே. (உ)

வீடென்றறைதரு சொற்குப்பொருளோ விடுதலையாதலினால்
வீக்குண்டோனும் கட்டுண்டோனும் விளங்குந்திடமாகப்
பீடுறுகட்டுத் தானாய்விட்டுப் பெயராதிருசடமாம்
பிணிபட்டோன சுதந்தரனுமிப் பிணிபெயரச்செய்வோ
னீடுசுதந்தர முளனாமொருவ னேநுமிவ்வேதுவினா
னிகழ்பதிபசுபாசம்மெனுமுப்பொரு ளித்தியமென்றருளி
வேடனைவெல்லுங்குருவா யெனையாண்மெய்ப்பொருணீயன்றோ
வேதகிரிப்பவ ரோகவயித்திய வேணிமுடிக்கனியே. (௧௦)

வேதகிரீசர் பகிகம் முற்றிற்று.

மலைமருந்து பதிகம்.

ஸ்ரீ மலைமருந்தென்பது வேதகிரிக்கு வடபுறம் சந்நிதிக்குக் கீழ்ப்புற முள்ள பிருதிவி. இதை எடுத்து ஜலத்திற் குழைத்து மேற்பூச்சிடின் பித்த பாண்டு, ஆறாதரிணங்கள், வீக்கம், தலைவலி, தேகஎரிச்சல், கைகால்வலிகள், பிடிப்பு முதலிய பலரோகங்களும், உள்ளுக்குச் சாப்பிடின் வயிற்றுவலி குன்மவகைகள், பலவிதசூலை, குஷ்டமுதலாய பலரோகங்களும் ஆச்சரிய மாய் நீங்குமென்பது அநுபவம். இப்பிருதிவியுள்ள பாரிசத்தின் மலையின் கண் சஞ்சீவி யிருப்பதாகப் பிரமாணம்.

கட்டளைக்கலித்துறை.

செய்யகமலத் திருவாழ் வளிக்குந் தியங்குமனத்
தையமகற்றுமறிவே கொடுக்குமடந்தைபிணி
நையநறுக்கு நமனையுருக்கு நளிகடல்சூழ்
வையந்துதித்திடும் வேதகிரீசர் மலைமருந்தே.

குளியம்போக்கும் பகைநீக்கும் வெய்யசுரந்தவிர்க்கும்
ஞானமுண்டாக்குமதன்போற் றிகழ்வுநயர்துதவும்
ஈனந்தவிர்க்கும் பசாசுகள் பூதத்திடரகற்றும்
வானவர்போற்றிடும் வேதகிரீசர் மலைமருந்தே. (௨)

சீர்கண்டமாலை தலைவலிபல்வலி சீதசுரம்
மூர்க்கஞ்செயும் விஷம்பீனிசங்காசமுதற்பலநோய்
தீர்க்குஞ்சமன் வலிநீக்கி மண்மேல் வச்சிரதேகந்தந்தே
மார்க்கண்டன் போல்வைக்கும் வேதகிரீசர் மலைமருந்தே. (௩)

நிரந்தரஞ்செல்வந் தருமொருக்காலுநிலைதளரா
புரந்தரன்மாலயன் விண்ணோரியற்றிய பூசனைக்கு
உரந்தருங்கல்வி தருஞ் சிவஞானத்தண்மைதரும்
வரந்தருள்செயும் வேதகிரீசர் மலைமருந்தே. (௪)

கருத்தைக்கெழுத்தன்னி காலசையாமல்கண் மூக்குநுனி
பொருத்திக்கருப்பைமட மாதர் கோள்மறைபூதரத்தை
யுருத்தியுடன் வலம்வந்திடுவோர்க் கொங்கிரும்பிறவி
வருத்தர் தணித்திடும் வேதகிரீசர்மலைமருந்தே. (௫)

ஆதாரத்தோடு மெழுத்தைந்துமோதியரியநந்தி
தேப்புனத்தடத்துள் மூழ்கிநித்தஞ் செயல்முடித்தே
ஓதியெழுத்தைந்தையு மடியாடனே யுரைப்ப
வாதையகற்றிடும் வேதகிரீசர் மலைமருந்தே. (௬)

விடந்தீர்க்குஞ்சோர மிருகால் திருடன் விறல்கெடுக்கும்
கொடுஞ்சூலைவாத குன்மங்களை நீக்குங்கொலையகற்றும்
மடஞ்சேர்மின்னார்கள் வசியமுண்டாக்கு வாமனிக்குந்
தடஞ்சேர்புயத்தண்ணல் வேதகிரீசர் மலைமருந்தே. (௭)

பஞ்சமாபாதகந்தீர்க்கு மெஞ்ஞான்றும் பரிவுடனே
தஞ்சமென்றேநம்பி யுண்போர்க்கமுத சஞ்சீவியதாம்
வெஞ்சினத்தோர் செயுங்குத்திரஞ்சாய்க்கும் விறல்கொடுக்கும்
வஞ்சமகற்றிடும் வேதகிரீசர் மலைமருந்தே. (௮)

கொல்வினைகுட்டங் கொலைநோயுங் குன்மம்கொலைகொடிய
பல்வினைதீபவிடப் பாண்டுநோய் பஞ்சபாதகமும்
தொல்வினையென்றந் தொலையாவினையுந் தொலைத்தடியேன்
வல்வினை தீர்த்திடும் வேதகிரீசர் மலைமருந்தே. (௯)

மூலவியாதிபொல்லாப்பாண்டுரோகமு மூர்ச்சைவலி
சாலவபாதிஷய ரோகமியாவையுந் தானடக்கும்
பாலசுந்தரியோர்பாகன் மூவல்சொல்பாடல்கொள்ளும்
மாலயன்றேடிடும் வேதகிரீசர் மலைமருந்தே. (௧௦)

நந்தித்தடஞ்சங்குதீர்த்தம் சம்பாதி மெய்ஞ்ஞானநதி
வந்திக்கில்வாழ்வருள் வனசொக்கவாரறைநீள்
அந்திப்பிறையணி வேதகிரீசரண்டம்மலைமண்
சிந்திக்கிலுன்வினைநீங்கி மெஞ்ஞானமுஞ் சேர்ந்திடுமே. (௧௧)

பள்ளிகொள்மாயனும் வேதனும் தேடும்பரிமலத்தில்
தெள்ளியபூங்குழல் பெண்ணினல்லாளொடுசேர்ந்தமரும்
வள்ளற்பெருந்தகை வேதகிரீசர் மலைமருந்தை
அள்ளியுண்டால்ப மன்தெண்டனிட்டோடிய வறுவனே. (௧௨

மலைமருந்துபதிகம் முற்றிற்று.

SUN OF INDIA PRESS, CHOOLAI, MADRAS.